# துவங்கியது வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., 'மெட்ரோ'





■ திருப்பூரில் நடந்த அரசு விழாவில், சென்னை, வண்ணாரப்பேட்டை – தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., வரையிலான மெட்ரோ ரயில் சேவையை, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக துவக்கி வைத்த பிரதமர் மோடி. உடன், இடமிருந்து: கவர்னர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர், இ.பி.எஸ்., துணை முதல்வர் பன்னீர்செல்வம். ■ வண்ணாரப்பேட்டையில் இருந்து, டி.எம்.எஸ்.,சுக்கு இயக்கப்பட்ட மெட்ரோ ரயிலில் பயணம் செய்த, மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்து துறை இணை அமைச்சர், ஹர்தீப்சிங் புரி. உடன், தமிழக அமைச்சர்கள் மற்றும் மெட்ரோ ரயில் அதிகாரிகள்.

சென்னை, பிப். 11–

சென்னை, வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்தை, திருப்பூரில் இருந்து, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக, பிரதமர் மோடி நேற்று துவக்கி வைத்தார்.

சென்னையில், விமான நிலையத்திலிருந்து, சென்ட்ரலுக்கும், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

**மோடி வருகை**

டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, 10 கி.மீ., மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை பணி முடிந்து, சோதனை ரயில் இயக்கப்பட்டு வந்தது.

அரசின் புதிய திட்டங்கள் துவக்க விழா மற்றும் பா.ஜ., பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள, நேற்று மதியம், திருப்பூர் வந்த பிரதமர் மோடி, வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்தை, வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக துவக்கி வைத்தார்.

சென்னை சென்ட்ரலில் நடந்த விழாவில், மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்து துறை இணை அமைச்சர், ஹர்தீப் சிங் புரி, தமிழக அமைச்சர்கள், ஜெயகுமார், எம்.சி.சம்பத், சரோஜா, தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலர், சோமநாதன் மற்றும் ஜப்பான் பன்னாட்டு நிதியத்தின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

முதல் ரயில், சென்ட்ரலில் இருந்து, வண்ணாரப்பேட்டை சென்று, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்.,சுக்கு இயக்கப்பட்டது. பின், அங்கிருந்து, விமான நிலையம் வரை இயக்கப் பட்டது.

**திட்ட செலவு**

சென்னை மெட்ரோ ரயில், முதல் கட்ட திட்டம், 19 ஆயிரத்து, 58 கோடி ரூபாய் செலவில், இரு வழித்தடங்களில், 45.1, கி.மீ.,க்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வழித்தடங்களான, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, 32 ரயில் நிலையங்கள் உள்ளன.



■ வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., மெட்ரோ ரயிலை இயக்கிய பெண் ஓட்டுனர் ஸ்ருதி.

இதில், 13 நிலையங்கள், தரைக்கு மேலும், 19 நிலையங்கள், சுரங்கப் பாதையிலும் அமைந்துள்ளன.

**பயணியர் போக்குவரத்து**

சென்ட்ரலில் இருந்து நேற்று துவங்கப்பட்ட முதல் ரயிலில், மெட்ரோ ரயில் அதிகாரிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் பயணித்தனர்.

இரண்டாவது ரயிலில், விழாவுக்கு வந்திருந்த அமைச்சர்கள், அதிகாரிகள், நிருபர்களுடன், பயணியர் சிலரும் பயணம் செய்தனர்.

இந்த ரயில், வண்ணாரப்பேட்டை சென்று, அங்கிருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வழியாக விமான நிலையத்துக்கு இயக்கப்பட்டது. இப்பாதையில், மாலை, 3:50 மணியில் இருந்து, பயணியர் அனுமதிக்கப்பட்டனர்.

மத்திய இணை அமைச்சர், ஹர்தீப் சிங்புரி அளித்த பேட்டி:

மெட்ரோ ரயில் முதல் திட்டப் பணிகள் வெற்றிகரமாக முடிந்து, ரயில் போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது, மகிழ்ச்சி அளிக்கிறது.

இரண்டாவது திட்டத்தில், மாதவரத்தில் இருந்து, மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணியில், மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்படும்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும் போது, சென்னையில், வாகன போக்குவரத்து நெரிசல் கணிசமாக குறையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 2ம் கட்ட பணிக்கு உதவ மோடியிடம் முதல்வர் கடிதம்

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாம் கட்ட பணிகள் துவங்க, விரைவில் அனுமதி வழங்கும்படி, பிரதமர் மோடியிடம், முதல்வர், இ.பி.எஸ்., கடிதம் அளித்தார்.

திருப்பூரில் நடந்த விழாவில், சென்னை வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையேயான மெட்ரோ ரயில் சேவை உட்பட, பல்வேறு திட்டப்பணிகளை, பிரதமர் மோடி துவக்கி வைத்தார். விழாவிற்கு வந்த பிரதமரிடம், முதல்வர், இ.பி.எஸ்., கடிதம் அளித்தார்.

அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின், இரண்டாம் கட்ட பணிகளை துவங்க, தமிழக அரசு உரிய முயற்சி எடுத்து வருகிறது. இரண்டாம் கட்ட திட்டத்தின் முதற்பகுதியாக, 50 கிலோ மீட்டருக்கு மெட்ரோ ரயில் கட்டமைப்புகளை உருவாக்க, ஜப்பான் பன்னாட்டு நிறுவனம், 20 ஆயிரத்து, 196 கோடி ரூபாய் கடன் வழங்க, ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில், முதல் கட்ட பணிகளுக்கு அளித்தது போல, இரண்டாம் கட்ட பணிகளுக்கும், 50 சதவீத நிதிப் பங்களிப்பை மத்திய அரசு வழங்க வேண்டும். திட்ட பணிகளை துவக்க, விரைவில் உரிய அனுமதியை வழங்க வேண்டும்.

இவ்வாறு, கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.